
பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

மே 2013 ❁ விலை ரூ. 15/-



அருள்மிகு திருவிடைக்கழி முருகன்

# பாச பந்தங்கள் நீக்கி முருகனின் பாதமலர் அடைய அருளும் திருப்பரங்கிரி


**சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்**

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்

Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


நமது தெய்வப் புலவர் திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் 10ஆம் பாடலில்

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்” என்று கூறியுள்ளார்.**

இந்தப் பிறவி என்னும் கொடிய நோயிலிருந்து நாம் விடுபடுவதற்கு நாம் நம் வாழ் நாளில் எந்த விதப் பயிற்சியை எடுத்தோம் என்று நாம் நினைத்துப் பார்த்தால் எதுவும் இல்லை என்ற பதில் தான் கிடைக்கும். நம் வாழ்நாளை நம்முடைய உறவினர்களுடனும், நமக்குத் தெரிந்தவர்களுடனும், பணம், புகழ் என்னும் நிலையில்லாப் பொருளைத் தேடி, உழன்று, அலைந்து, திரிந்ததுதான் நாம் கண்ட பலன். நம் வாழ்க்கையில் மேலே சொன்னவை நமக்கு அவசியம்தான், ஆனால் அதில் நாம் அதிகமான பற்று வைத்து, பொருள் சேர்த்து அடுத்து வருகின்ற 10தலைமுறைகளுக்கு சேர்த்து வைப்பதுதான் நாம் செய்கின்ற மிகப் பெரும் தவறு ஆகும். நம்முடைய பாரத நாடு ஒரு காலகட்டத்தில் அரசர்களால் ;ஆளப்பட்டது. அவர்கள் சேர்த்து வைத்திருந்த பொருளை வேறு ஒரு அரசன் போரிட்டு அபகரித்தான். இந்த அரசன் அபகரித்த பொருளை காலத்தின் மாற்றத்தால் வெள்ளையர்கள் அபகரித்தார்கள். பின்பு இந்தியத் திருநாட்டில் பலர் தன் உயிரையும் கொடுத்து, பொருள்களையும் இழந்து மிகப் பெரும் போராட்டம் நடத்தியதன் விளைவாக நமது நாடு ஒரு மிகச் சிறந்த ஜனநாயக நாடாக மாறியது. இன்று நம் நாட்டில் பிற நாடுகளின் வியாபாரம், மற்றும் வேறுசில நாடுகளின் மோசமான நாகரிகமும் வளர்கின்றன. இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு மாற்றங்கள் நடக்கின்றன.இவை யாவும் நமக்குத் தெரிந்தும், நாம் நம்முடைய தலைமுறைக்கு சொத்துகளைச் சேர்த்துவைத்து, தானும் அதை அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டு, மிக்க வருத்தத்துடன் நம் வாழ்நாளைக் கழித்து வீணாக்குகிறோம். இதற்கு அடிப்படைக் காரணம் பாசம், அல்லது ஆசை எனப்படும் முக்கிய மூலக் கூறுகள்தான்.



நமக்கு நல்வினை இருக்குமானால் செல்வமும், புகழும் வந்து சேரும். இவை இரண்டும் இருந்தால் உறவினர் வானத்துமீன்களிலும் அதிகமாவார்கள். நம்மிடம் மிருந்த அன்பு காட்டுவது போல் நடிப்பார்கள். அவர்களின் அன்பெல்லாம் பயன் கருதித்தான்; தமக்குப் பொருள் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கைதான். செல்வம் உள்ளபோது, அவர்களை நாம் மதிக்கா விடினும் நம் பின்னே கைகட்டிப் பின் வரத் தயங்கமாட்டார்கள். நமக்குத் தீவினை வந்து சேருமேல் அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல் நம்மை விட்டுப் பறந்து விடுவார்கள். நாம் வறுமையும், துன்பமும் அடையும்போது எவரும் உறவு கொண்டாடமாட்டார்கள். நமக்கு எவ்வித உதவியும் செய்ய மாட்டார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் நம் மனம் நோகும்படி இழித்தும் பழித்தும் பேசுவார்கள். உறவோரில் பெற்ற தாய் ஆயினும் தந்தை ஆயினும், சகோதரிகளாயினும் துன்பத்தில் துணையாக மாட்டார்கள். இவர்கள் தம் நலம் கருதியே அன்பு காட்டுவார்கள், நம் நலன் கருதி அன்பு காட்டவில்லை. இல்லானை இல்லாளும் வேண்டாள்; மற்றும் ஈன்றெடுத்த தாய் வேண்டாள். அவன் வாய்ச்சொல் செல்லாது.

ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இவர்கள் சந்தையில் கூடிய கூட்டம் போன்றவர்தாம். “தந்தைதாய் தமர் தாரம் மகன் என்னும் இவை எலாம் சந்தையில் கூட்டம் இதிலே சந்தேகம் இல்லை” என்றார் தாயுமான சுவாமிகள். வாரச் சந்தை, மாதச் சந்தை என்று சில ஊர்களில் கூடுவது வழக்கம். பல ஊர்களிலிருந்தும் வந்து பொருள்களை விற்கவும், பொருள்களை வாங்கவும் மக்கள் கூடுவார்கள். காலை முதல் மாலை வரை வணிகம் நடைபெறும். வந்த வேலை முடிந்தவுடன் மாலையில் அவரவர் ஊர்களுக்குத் திரும்பி விடுவார்கள். சந்தை கூடிய இடம் வெறும் வெற்றிடமாகக் காட்சியளிக்கும். காலை முதல் மாலை வரை பொருளை விற்றவரும், அவற்றை வாங்கியவரும் எந்த வகையிலும் உறவினர் இல்லை. ஆனால் ஒருவருக்கொருவர் அன்புடன் பேசிக் கொள்வார்கள். விற்றோர் வாங்குவோர் என்ற உறவும் இருக்கும். இது வெறும் சடங்குதான். நாம் தந்தை, தாய், சகோதரர், சகோதரி, உறவினர் என எண்ணும் இவர்களும் நமக்கு நிலையான உறவு இல்லை. உண்மை உறவும் இல்லை. ஒரு காலத்தில் சந்தைக் கூட்டம் போல் கலைந்து போய்விடுவார்கள். சுவாமிகள் அருளிய ஞான வாக்கியத்தில்

50ஆம் வாக்கியமாக "சேய் பெண்டு சுற்றம் மாய்கின்ற மட்டும்" இதன் உட்பொருள் மக்கள், மனைவி, சுற்றம் நாம் சாகும் வரை மட்டும்தான் என்பதாகும்.

இந்த உறவினர்களுக்கும் நமக்கும் உள்ள உறவு உடம்பு சம்பந்தப்பட்டதுதான். இவர்கள் இறக்க நேர்ந்தால் அத்துடன் உறவும் அற்றுப் போய் விடுகிறது. மேலும் இவர்களுடைய உறவு நமக்கு இந்தப் பிறப்பில் மட்டும் தான். முன் பிறப்புகளில் இவர்கள் யாரோ, நாம் யாரோ? அறியோம். வரும் பிறவிகளிலும் இவர்களுடன் நமக்கு எந்தவிதத் தொடர்பும் இருக்கப் போவதில்லை. நமக்கு அநாதியாக உறவு கொண்டுள்ளவர் இறைவன் ஒருவனே. உயிர்க்கு உயிராய் இருந்து காத்துவரும் உயிர்த்துணை அவன் ஒருவன்தான். அவன்தான் நமக்கு உண்மையான தந்தையும் தாயுமானவர். தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து வாழ வைக்கிறார். கேவலாவத்தையில் ஆணவமலத்தில் கட்டுண்டு அறிவு இச்சை செயல் ஒன்றுமின்றி வருந்திக் கிடக்கும் உயிரைக் கரையேற்றும் பொருட்டுக் கருணை கொள்கிறார். சகலாவத்தையில் தனுகரணங்களைக் கொடுத்து அறிவு இச்சை செயல் நிகழும்படிச் செய்விக்கிறார். இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் நிகழச் செய்து ஆணவமல சத்தியை ஒழிக்கிறார். ஆன்மாவைத் தூய்மையாக்கித் தன்னுடன் இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற அருளுகிறார். இதுவே சுத்தாத்துவிதநிலை. இத்தனை உபகாரத்தைப் பயன் கருதாமல் செய்யும் வள்ளல் இறைவன் ஒருவனே. அவனே நமக்குப் பிறவி தொறும் பிறவாமை பெற்ற காலத்தும் உண்மைத் தந்தையும், தாயுமானவர். அதனால் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இப்பதிகத்தில் முதல் வார்த்தையாக "எந்தையே! இறையே!" என்று துதிக்கிறார். தந்தை மகன் உறவு கொண்டாடுகிறார்.

இறை என்னும் சொல் உயர்ந்தோன், பெரியோன் என்ற பொருளில் கடவுளைக் குறிக்கும். எங்கும் தங்கியிருப்பவன் என்ற பொருளில் இறுத்தல் எனும் சொல்லடியாக, இறை எனும் சொல் பிறந்தது. எனக்கு மிக எளியனாக, என் தந்தைபோல் எனக்கு உறவாகி எப்போதும் என் அருகிலும் இருப்பான். வாக்கு, மனம், மெய்களுக்கு எட்டாத பொருளாய் எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் நிறைந்த பரம்பொருளாயும் இருப்பான் என்ற இவ்விரு கருத்துகளையும் உணர்த்தும் தொடரே "எந்தையே இறையே" என்பதன் உள் அர்த்தமாகும்.

**"எந்தை யேயெம் பிரானே யெனவுள்கிச்**
**சிந்திப் பாரவர் தீவினை தீருமால்"** (8) எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரமும் கூறுவது காண்க.

**"இறையென் சொல்மற வேல்நமன் தூதுவீர்"** (திருக்குறுந்தொகை 5)

இறைவனாகிய முருகப் பெருமானின் அருள் இல்லையேல் இவ்வுலகில் எந்தப் பொருளும் வாழ முடியாது. அவன் அருள் - சாமானிய அருள் மற்றும் விசேஷ அருள் என இரண்டுவகை எனச் சுவாமிகள் திருப்பாவில் கூறியுள்ளார்கள். சாமானிய அருளினால் அசையும் பொருள் அசையாப் பொருள் அனைத்தையும் வாழ வைக்கிறார். தனுகரண புவன போகங்கள் அனைத்தும் உயிர்களுக்குப் பொதுவாக அளித்து வருகிறார். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களும் யாவருக்கும் பொதுவானவைதாம். இயற்கை எனப்படுவதும் பொதுவானதுதான். இறைவனை விரும்பாதவர்க்கும் வெள்ளறிவு என்னும் நோயுள்ள தன்மையினால் தெய்வம் இல்லை என்று கூறும் நாத்திகர்களுக்கும், அளவில்லாத வேறுபாடுகள் கொண்டு விளங்கும் இழிவான அஃறிணை உயிர்களுக்கும் உணவு உடை முதலிய அனைத்தையும் இச்சாமானிய அருளினால் வழங்கி வருகிறார். இறைவனுடைய இப்பெருங்கருணையை எவரும் நன்றியுடன் நினைப்பதில்லை.

பிராணன் இன்றி ஒரு நிமிடம் வாழ முடியுமா? உண்ண உணவும் பருக நீரும் இன்றி வாழ முடியுமா? பிறப்பு முதல் இறப்பு வரை நம்மைத் தாங்கி வாழவைக்கும் இந்த நிலமின்றி வாழ முடியுமா? உணவு சமைக்கவும், குளிர்காயவும், ஒளியை வழங்கவும் பயன்படும் நெருப்பையும், அசையும்பொருள், அசையாப்பொருள் அனைத்தும் தங்குவதற்கு ஆதாரமான ஒரு பெருவெளியாகவும் ஓசையைத் தருவதாகவும் உள்ள ஆகாயமின்றி இங்கு இருக்க முடியுமா? இவை எல்லாவற்றையும் நல்லார்க்கும் பொல்லார்க்கும் உயர்திணைக்கும், அஃறிணைக்கும் சமமாக வழங்கி வரும் உயர்ந்த நீதியரசர் அந்த இறைவன் முருகனே என்றும், சாமானிய அருளை நன்றியுடன் நினைவு கொள்கிறார். அதனால்தான் உன் துணையான அருள் இல்லையேல் இவ்வுலகில் நான் உயிர் வாழ முடியாது என்று சுவாமிகள் இப்பதிகத்தில் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மனம் எந்தப் பொருளைப் பற்றுகிறதோ அந்தப் பொருளின் வடிவடைகிறது. இறைவன் உருவத்தைத் தியானித்தால் மனம் அந்த உருவத்தை அடையும். இவ்வாறு அடைந்த மனமே பரமனமாகும். வேறு வேறு உருவங்களைப் பற்றினால் பரமனமாகாது. ஆகையால் தான் சுவாமிகள் ஏக தெய்வ வழிபாட்டில் உறுதி கொண்டு தன் வாழ்நாளில் முருகனைத் தவிர பிற தெய்வங்களை தன்னுடைய வழிபாட்டில் கொள்ளவில்லை. ஆன்மிக வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய விரும்பும் அடியார்கள்" இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!", என்றவாறு இமைப் பொழுதும் நீங்காது இறைவன் உருவைச் சிந்திக்கப் பழக வேண்டும். அவ்வாறு பழகினால் உருவமனம் இறைவன் ஆருளால் பரமனமாகி அருவத்தைப் பற்றும் நிலை அடைகிறது. இப்பதிகத்தில் "சிந்தைசேர்வானே", என்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கூறுகிறார். இதில் செவ்வேட் பரமனான முருகனின் சொரூப நிலையைக் குறிப்பிடுகிறார். தம் மனத்தில் காட்சியளித்த ஆகாயமே என்கிறார். ஆகாயம் ஓர் அருவப் பொருள். சுவாமிகள் மனம் பரமனமாகிவிட்டதால் ஆகாயத்தைப் பற்றும் உயர்நிலையை அடைந்துவிட்டார்கள். இந்த நிலையை சுவாமிகள் குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதியில் "இஃது சட ஆகாசம் அன்று; அறிவாகாசம். இறைவன் சொரூபம் அறிவாகாசம் ஆகும். இதனையே சிதாகாசம், சிதம்பரம் என்பார்கள்." எனக் கூறியுள்ள சிறப்பை இப்பதிகத்தைப் படித்தால் நாம் உணரலாம்.

### திருப்பரங்கிரி உறை சிவனே:-

இக்கிரி திருப்பரங்குன்றம் எனவும், ஞானமலை எனவும், சுகமலை எனவும் வழங்கப் பெறும் தெய்விகம் பொருந்திய மலையாகும்.ஒற்றைக்கல் மலையாக ஓங்கி

நிற்கிறது. இது ஒரு குடைவரைக் கோயில். இங்கு வேலாயுதத்திற்குத்தான் அபிடேகம். இங்கு எழுந்தருளியுள்ள சுப்பிரமணியதேவைச் சுவாமிகள், “சிவனே”, என்று துதிக்கிறார். “ஐந்து முகத்தோடு அதோ முகமும் தந்து தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்'', எனக் கந்தர் கலிவெண்பாவும், “அறிஞராயோர் சிந்திக்கும் தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்”, எனக் கந்தபுராணமும் கூறுவதால், ஐந்து முகமுடைய சதாசிவமூர்த்தி தன்னிடம் ரகசியமாக உள்ள அதோ முகத்தை வெளிப்படுத்தி ஆறுமுகச் சிவனாகத் தோன்றியதால் ஐந்து முகச் சிவனே ஆறுமுகச் சிவன் என்ற இயல்பான தோற்றத்தை உணர்ந்த சுவாமிகள், “சிவனே” என்று துதித்தார்கள். திருப்பரங்கிரி என்பதுதான் திருப்பரங்குன்றம் எனப்படும். இந்த மலை மதுரையில் உள்ளது.

**பாசம் என்னும் பந்தத்தைப் போக்கி முருகனின் பாதமலர் பெறுவது:-**

ஆன்மாக்கள் பாசங்களால் கட்டுண்டு கிடக்கும் நிலை பந்தம் எனப்படுகிறது. ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் எனும் மும்மலங்களும் பந்தங்களாகும். பாசம் என்பது கயிறு. இம்மலங்கள் உயிரைக் கட்டுவதால் பாசம் என்று அழைக்கப்படுகின்றன. மும்மலங்களுள் ஆணவமலமே ஒழிக்க முடியாத வலிமை உடையது. இதனை மும்மலம் என்றும், சகஜமலம் என்றும் கூறுவர். இம்மலம் முத்தி நிலையிலும் இருக்கும். இம்மலம் அநாதி. இம்மலத்தின் தூண்டுதலால்தான் கன்மமும் மாயையும் செயல்படுகின்றன. இப்பந்தங்களைச் செவ்வேட்பரமன் திருவருள் திரோதனா சத்தியாய் இயக்கிப் படிப்படியாக நீக்கி அநுக்கிரக சத்தியாய் மாறி அருள்புரிகிறது.

முருகனின் பாத மலர் பெறுவதற்கு ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய “திருப்பரங்கிரிப் பதிகம்” இரண்டாம் மண்டலத்தில் முதல் கண்டத்தில் 8ஆம் பதிகமாக பண் பஞ்சமத்தில் 10பாடல்கள் உள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் கற்க வேண்டும் என்ற எண்ணத்தில் இப்பாடலை www.pambanswamigal.org or www.pambanswamigal.net or www.pambanswamigalenguru.blogspot.in ஆகிய இணைய தளங்களில் சென்று பார்த்தால் உங்கள் வீட்டுக் கணினி உங்களுக்கு கற்றுக் கொடுக்கும். இணையதளம் பார்க்க முடியவில்லை என்ற கவலை மெய்யடியார்களுக்கு இருக்குமென்றால் சண்முக கவசம் ஆசிரியரைத் தொடர்பு கொண்டால் தங்கள் இல்லத்திற்கு இலவசமாக அனுப்பி வைக்க முடியும். எங்களுடைய முக்கிய குறிக்கோள், சுவாமிகள் பாடல்களைப் படித்து, அதில் சுவாமிகள் கூறிய தெய்வ வாக்குக்கு இணங்க நீங்கள் முருகனின் பாதமலர் அடைய வேண்டும் என்பது ஒன்றுதான். சுவாமிகள் அருளிய பாடல்களில் சில பின்வருமாறு:-

**திருப்பரங்கிரி**

**பண்: பஞ்சமம்**

எந்தையே யிறையே யிணையரு ளிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
சிந்தைசேர் வானே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
பந்தமே போக்கிப் பதவரு ளாக்கிப்
பகலிர வணவிடா நிலையிற்
சந்ததஞ் சேர்க்கத் தயவுசெய் யாயோ
சரவண சுயம்பெரு மாணே. 1.

ஏசுறா வருளா மிதநல மிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
தேசுசே ரெழிலே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
பாசமே போக்கிப் பதவரு ளாக்கிப்
பரபரி பூரண நிலையில்
நேசமாய் நிலைக்கச் செயும்வகை புரியாய்
நிகழயிற் சுயம்பெரு மானே. 2.

இன்றுநா ளையெனலி லாவரு ளிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
சென்றுதே யாவை திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
அன்றுநீ சொனவா றடிமையை யழைத்துன்
னடித்தொழும் பாயுறும் வேலை
ஒன்றையே விதிப்பா யறிற்படை படித்தே
யொளிர்சுப சுயம்பெரு மானே. 3.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**